## கல்லூரியின் பொன்விழா கொண்டாட்டம்

“காயிதே மில்லத்” அவர்களது உன்னதமான கொள்கைகளை நிலைநிறுத்தவும், அவரது மரபைத் தொடரவும், கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்கான நோக்கத்தை முன்னேற்றுவதற்காகவும் காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை 1974-ல் நிருவி, 1975-ஆம் ஆண்டில், மேடவாக்கத்தில் காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி தொடங்கப்பட்டு சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இசைவு பெற்று, பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டது.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் என்று அன்போடு நினைவுக் கூறப்படும் அல்ஹாஜ் எம்.முஹம்மத் இஸ்மாயில் சாஹிப், சிறந்த தொலைநோக்குப் பார்வைக் கொண்ட ஒரு அரசியல்வாதி, தேசிய ஒற்றுமை மற்றும் கல்வியின் தீவிர ஆதரவாளராக இருந்தவர். இவர் 05 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், இந்திய அரசியலமைப்புச் சபையின் உறுப்பினராகவும், அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் முக்கிய பங்களித்தவர். மாநிலங்களவை மற்றும் மக்களவை இரண்டிலும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். கல்வி மற்றும் சமூக நீதிக்கான இவரது அயராத முயற்சிகள் பல கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்களை நிறுவுவதற்கு உத்வேகம் அளித்தன.

இக்கல்லூரி மிகக் குறைந்த கட்டணத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து, கடந்த 30 ஆண்டுகளாக அரசு நிர்ணயித்த கட்டணத்தை தொடர்ந்து கடைப்பிடித்து மாணவ, மாணவியர்களுக்கு இக்கல்லூரி நிர்வாகம் சிறந்த கல்விச் சேவையை செய்து வருகிறது.

மேலும் இக்கல்லூரி இந்நிகழ் கல்வியாண்டில் தனது பொன் விழாவை சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இதன் ஒரு பகுதியாக நடைபயணம், மாபெரும் இரத்ததான முகாம், சுகாதார முகாம், மாவெரும் வேலைவாய்ப்பு முகாம், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. பொன்விழாவின் ஒரு பகுதியாக “காயிதே மில்லத்” புகைப்படக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒரு வார காலம் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டது. இக்கண்காட்சி கல்லூரி மாணவர்கள், பல்வேறு பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.




நிறுவனர் மற்றும் நிர்வாகத்தினர்

**காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை**

B-7 பழனி டவர்ஸ், 3வது தளம், 65, வெங்கட்நாராயண சாலை,
தி.நகர், சென்னை-600017.தொலைபேசி: 044 - 2277 1202 / 2277 1819
Mail: quaidemillethtrust@gmail.com, Website: www.qmcmen.com


# அழைப்பிதழ்



## காயிதே மில்லத் கல்லூரியின்
## 50வது பொன்விழா கொண்டாட்டத்தின்
# “நிறைவு விழா”




| | |
|---|---|
| நாள் | : **10.02.2026** |
| நேரம் | : காலை **10.00** மணி |
| வளாகம் | : கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி அரங்கம் |
| | : காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி<br>மேடவாக்கம், சென்னை-600100 |

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

நிர்வாகம், முதல்வர், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள்
சார்பில் உங்களை அன்போடு அழைப்பதில் மகிழ்கிறோம்

# பொன்விழா கொண்டாட்டத்தின் நிறைவு விழா

திரு. **மு.க. ஸ்டாலின்**
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

சிறப்புரை

தலைமை

ஜனாப் **எம். ஜி. தாவூத் மியாகான்**
செயலர் மற்றும் தாளாளர்

முன்னிலை

ஜனாப் **எ. முஹம்மத் அலி**
தலைவர், CREDAI சென்னை.
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்
South India Shelter Pvt. Ltd.,

ஜனாப் **சிராஜீத்தீன்**
தலைவர், ராயல் கிங்ஸ் குரூப்,
சிங்கப்பூர்.

முனைவர் **ச. சாதிக்**
முன்னாள் துணை வேந்தர்,
சென்னைப் பல்கலைக்கழகம்
புரவலர், காயிதே மில்லத் கல்லூரி.

வாழ்த்துரை

திரு. **கோவி. செழியன்**
மாண்புமிகு உயர்கல்வி துறை அமைச்சர்

திரு. **அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
மாண்புமிகு பள்ளிக்கல்வி துறை அமைச்சர்

திரு. **மா. சுப்ரமணியன்**
மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்

நீதியரசர் **கே. என். பாஷா**
முன்னாள் நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம்

ஜனாப் **எ. முஹம்மத் அஷ்ரப்**
தலைவர், OMEIAT

தங்களின் நல்வருகையை எதிர்நோக்கும்

முனைவர் **எம். அம்துல் தவாப்**
முதல்வர்

முனைவர் **எஸ். ஷேக் கலீல்**
துணை முதல்வர்

முனைவர் **ஆர். மணிகண்டன்**
துணை முதல்வர்

